### வங்கியில் பணம் எடுத்து வருவோரிடம் கைவரிசை

# ஆந்திராவைச் சேர்ந்த நான்கு பேர் கைது

## ரூ.3 லட்சம் ரொக்கம், செல்போன்கள் பறிமுதல்

**திருச்சி, நவ. 28:**

**மணப்பாறை மற்றும் திருச்சி பகுதிகளில் வங்கிகளிலிருந்து பணம் எடுத்து வரும் பொதுமக்களின் கவனத்தை திசை திருப்பி பணத்தை கொள்ளையடித்து சென்ற ஆந்திராகொள்ளை கும்பலை சேர்ந்த நான்கு பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ரூ.3 லட்சம் மற்றும் செல்போன்கள், பைக்குகள்சூ ஆகிய வற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.**

மணப்பாறையில் கடந்த சில நாட்களுக்கு முன் பல் மருத்துவமனை முன்பு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த ரூ.49 ஆயிரம் கொள்ளை போனது.

இதேபோல் துவரங்குறிச்சியில் வங்கியில் இருந்து பணம் எடுத்து மொபட்டில் சென்று கொண்டிருந்தவரின் கவனத்தை திசை திருப்பி ரூ.3 லட்சம் ரொக்கத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக மணப்பாறை துணை போலீஸ் சூப்பிரண்டு குத்தாலிங்கம் தலைமையிலான தனிப்படை போலீசார், கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை மணப்பாறை பகுதியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணதாசன் தலைமையிலான போலீசார் ரோந்து சென்றபோது சந்தேகப்படும் வகையில் 2 மொபட்டுகள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேரை பிடித்து விசாரித்தனர். இதில் அவர்கள், ஆந்திராவை சேர்ந்த பாபு (வயது 45), மோகன் (வயது 27), ரமணா (வயது 31), சரவணா (வயது 30) என்பதும், மணப்பாறை மற்றும் துவரங்குறிச்சியில் நடைபெற்ற கொள்ளையில் 4 பேருக்கும் தொடர்பு இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து 4 பேரையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் இருந்து ரூ.3 லட்சத்து 10 ஆயிரம் மற்றும் 4 செல்போன்கள், 2 மொபட்டுகள், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

பின்னர் 4 பேரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

வயதானவர்கள் வங்கியில் இருந்து பணம் எடுத்து வரும்போது அவர்களை நோட்டமிடும் மர்ம நபர்கள் தான் இதுபோன்று கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுகின்றனர்.

ஆகவே கொள்ளை சம்பவங்களை தடுத்திட வங்கிக்கு செல்லும் முதியோர்கள் தங்களுடன் நம்பிக்கைக்குரிய ஒருவரை உதவிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று மணப்பாறை போலீஸ் துணை சூப்பிரண்டு குத்தாலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

## வாகனம் மோதி தொழிலாளி சாவு

விழுப்புரம்,நவ.28:

வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்தார்.

விக்கிரவாண்டியை அடுத்த நேமூரை சேர்ந்தவர் ராஜ்குமார் (வயது 40), தொழிலாளி. இவர் பனையபுரத்தில் உள்ள தனது நண்பரின் வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் பனையபுரத்தில் இருந்து நேமூருக்கு செல்ல பஸ் ஏறுவதற்காக பாப்பனப்பட்டு தேசிய நெடுஞ்சாலையை கடக்க முயன்றார். அந்த சமயத்தில் அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத வாகனம், அவர் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது. இந்த விபத்தில் ராஜ்குமார் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

இது குறித்த புகாரின் பேரில் விக்கிரவாண்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் சாதனைகளை விளக்கும் சிறு புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

### மும்பை சிவாஜி பார்க்கில் இன்று மாலை பிரமாண்டமாக நடைபெறுகிறது

# உத்தவ் பதவியேற்பு விழா: ஸ்டாலின்- மம்தா பங்கேற்பு

## சோனியா, ராகுல் வரவில்லை என தகவல்

**மும்பை, நவ.28:**

**மகாராஷ்டிரா மாநில புதிய முதல்வராக உத்தவ் தாக்கரே இன்று மாலை 6.45 மணியளவில் மும்பை சிவாஜி பார்க் மைதானத்தில் நடைபெறும் விழாவில் பதவியேற்கிறார். இதில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மம்தா உள்ளிட்ட சில மாநில முதலமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.**

காங்கிரஸ் தலைவர் சோனியா, ராகுல்காந்தி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என தெரிகிறது.

மராட்டிய சட்டசபை தேர்தலில் பாரதீய ஜனதா-சிவசேனா கூட்டணி வெற்றி பெற்றும் கருத்து வேறுபாடு காரணமாக ஆட்சி அமைக்க முடியாததால், அந்த மாநிலத்தில் கடந்த 12-ந் தேதி ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

அதன்பிறகு அங்கு அடுத்தடுத்து அரசியல் திருப்பங்கள் நிகழ்ந்தன. அவசரகதியில் பதவியேற்ற முதலமைச்சர் பட்னாவிசும், துணை முதலமைச்சர் அஜித்பவாரும் அடுத்தடுத்து ராஜினாமா செய்ததை தொடர்ந்து சிவசேனா, காங்கிரஸ், என்சிபி கூட்டணி ஆட்சி அமைகிறது.

சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகள் கூட்டணி (மராட்டிய வளர்ச்சி முன்னணி) அரசு அமைக்க வழி பிறந்தது.

இதையடுத்து உத்தவ் தாக்கரேவை ஆட்சி அமைக்குமாறு கவர்னர் கோஷ்யாரி அழைப்பு விடுத்தார். அதை ஏற்று இன்று மாலை 6.45 மணியளவில் மும்பை சிவாஜி பூங்கா மைதானத்தில் பிரமாண்டமான முறையில் பதவியேற்பு விழா நடைபெறுகிறது. சுமார் 50,000 பேர் இதில் பங்கேற்பார்கள் என் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பங்கேற்குமாறு சோனியா, ராகுல் ஆகியோரை டெல்லியில் சந்தித்து உத்தவ் தாக்கரே மகன் ஆதித்ய தாக்கரே அழைப்பு விடுத்தார். ஆனால் சிவசேனையிடமிருந்து சற்று விலகி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருவரும் விழாவுக்கு வரவில்லை என தெரிகிறது.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆகியோர் விழாவில் பங்கேற்பார்கள் என தெரிகிறது.

துணை முதலமைச்சர் பதவிக்கு தேசியவாத காங்கிரசில் இருந்து மீண்டும் அஜித் பவாரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் வெளியாகி உள்ளது. 3 கட்சிகளையும் சேர்ந்த 6 பேர் இன்று பதவியேற்பார்கள் என தெரிகிறது. துணை முதலமைச்சர் பதவி கேட்ட காங்கிரசுக்கு சபாநாயகர் பதவி கொடுக்கப்பட உள்ளது.

## அன்னை தெரசா கல்லூரி பட்டமளிப்பு

புதுச்சேரி, நவ.28:

புதுச்சேரி அரசின் கல்வி நிறுவனமான காரைக்கால் அன்னை தெரசா சுகாதார பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 14ஆம் ஆண்டு விழா மற்றும் ஒளி விளக்கு ஏற்றி மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி காரைக்காலில் நடைபெற்றது.

இந்த விழாவில் காரைக்கால் மாவட்ட கலெக்டர் விக்கிரமராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தி பேசினார். புதுச்சேரி செவிலியர் கல்லூரி முதல்வர் ஜெயந்தி ஒளிவிளக்கு உறுதிமொழி வாசித்தார் அதனை தொடர்ந்து மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்றனர் இதில் தலைமை செவிலியர் அதிகாரி பிரமிளா தமிழ்வாணன் ஆய்வக முதல்வர் திருமுருகன் காரைக்கால் மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் சித்ரா திருப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி துரைராஜ் அரசு மருத்துவமனை தலைமை ஆசிரியர் உள்பட பலர் கலந்து கொண்டனர்

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு, ஆணையாளர் கே.பிரகாஷ் தலைமையில் ரிப்பன் மாளிகை வளாகத்தில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்திய அரசமைப்பு முகப்புரையை வாசித்தனர்.

## லாட்டரி சீட்டு விற்றவர் கைது

விழுப்புரம், நவ.28:

**விழுப்புரத்தில் லாட்டரி சீட்டு விற்பனை செய்த ஒருவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

விழுப்புரம் பாகர்ஷா வீதியில் மேற்கு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ராஜலட்சுமி தலைமையிலான போலீசார் ரோந்துப்பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து கொண்டிருந்ததாக விழுப்புரம் வண்டிமேட்டை சேர்ந்த சீனு (வயது 40) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.


**பெயர் மாற்றம்**

நாகப்பட்டினம் மாவட்டம்-609 311, திருக்காடையூர், தரங்கம்பாடி (தாலுகா), கீழ தெரு, எண்.1-165 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. தங்கவேலு என்பவரின் மகனாகிய அமிர்தகடேசன் தங்கவேலு (AMIRTHAKATESAN THANGAVELU) என்கிற நான் (பிறந்த தேதி:15.09.1952) இனிமேல் GIVEN NAME: அமிர்தகடேசன், SUR NAME: தங்கவேலு (GIVEN NAME: AMIRTHAGADESAN), SUR NAME: THANGAVELU) என்று அறியப்படுவேன்.

அமிர்தகடேசன் தங்கவேலு
AMIRTHAKATESAN THANGAVELU

**பத்திரம் காணவில்லை**

நான், M.சிவரஞ்சனி க/பெ.மோகன், வயது 29, வசிப்பிடம் எண்.1/619 B, சோளமண்டல தேவி நகர்,3வது தெரு,சஞ்சம்பாக்கம்,காஞ்சீபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா,சென்னை-600 115 என்னுடைய அசல் விற்பனை பத்திரம் ஆவண எண்.12144/b1/96 16.05.2019 ஆம் தேதியில் நீலாங்கரை SRO-ல் பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய ஆவணம் ஆட்டோவில் அடையார்-க்கு சென்ற போது தவற விட்டுவிட்டேன். மேற்படி யாரேனும் பத்திரத்தை முறையின்றி வைத்திருந்தாலோ அல்லது கண்டெடுத்தாலோ எனது மேற்கூரிய முகவரியில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. தொடர்புக்கு: M.சிவரஞ்சனி- 99622 11514

**பொது அறிவிப்பு**

எனது கட்சிக்காரர் சென்னை-600 010, கீழ்ப்பாக்கம், தம்புசாமி ரோடு. எண்.40, Prince Garden Appartment, B Block, எண்.103, என்ற விலாசத்தில் வசிக்கும் திருமதி.மெர்சி பூமொழி, க/பெ.கலஞ்சென்ற D.J.தினகரன், அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் வெளியிடப்படும் பொது அறிவிப்பானது, புல எண்.227/22, T.S.No.145, Block No.8, ward-F, ஆதம்பாக்கம் கிராமத்தில் அடங்கிய மனை எண்.16, கதவு எண்.7, சாந்தி நகர் 2-வ தெரு, ஆதம்பாக்கம் சென்னை-600 088-னை மேற்படி நபருடைய கணவரின் தாயார் காலஞ் சென்ற திருமதி.மெல்லிசென்ட் அவரின் பெயரில் கிரயம் பெற்று அக்கிரய ஆவணத்தினை ஆவந்தூர் சார்பதிவகத்தில் 1909 of 2005 ஆவணமாக பதிவு செய்து ஆண்டு அனுபவித்து வந்து அவர் காலதிசைக்கு பிறகு அவரது குடும்ப உறுப்பினர்கள் கூட்டாக ஆண்டு அனுபவித்து வந்த அசல் ஒரு வரிசுதாரரான திரு. D.ஸ்டான்லி அவர்களால் விடுதலை செய்யப்பட்ட மொத்தம் 1/2 பாக உரிமையுடன் இதர குடும்ப உறுப்பினர்களுடன் கூட்டாக ஆண்டு அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்திற்குரிய பத்திரங்களை நகல் எடுப்பதற்காக 26.11.2019 தேதியில் மாலை சுமார் 7.00 அளவில் அசோக் நகர், ஆறாவ கௌபா ரோட்டில் உள்ள நகலகத்திற்கு நகல் எடுக்க எடுத்துச்சென்ற போது கீழ்கண்ட அசல் ஆவணங்களினை

| Sl.No. | Document No. | Type Document | Type Document |
|---|---|---|---|
| 1 | 258/2005, Book IV | General Power of Attorney | ஆவந்தூர் |
| 2 | 122/1993 | Sale deed | ஆவந்தூர் |
| 3 | 105/1972 | Sale deed | ஆவந்தூர் |
| 4 | 359/1978 | Sale deed | ஆவந்தூர் |

கைதவறி விட்டு விட்டார். மேற்படி ஆவணத்தினை தீவிரமாக தேடிப்பார்த்தும் கிடைக்க வில்லை என்று தெரிவிக்கிறார்.

எனவே மேற்படி ஆவணத்தினை எவரேனும் வைத்திருந்தாலும் கண்டெடுத்தாலும் உரிமை கோரினாலும் கீழ்கண்ட என்னுடைய விலாசத்திற்கோ எனது கட்சிக்காரர் வசமோ 7 நாட்களுக்குள் தெரியப்படுத்த வேண்டியது. அவ்வாறு இல்லைபெனில் மேற்சொன்ன ஆவணம் மீது திருமதி.மெர்சி பூமொழி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை தவிர வேறு எவருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தி.கேசவன், எம்.ஏ. பிஎல்.
வழக்குரைஞர்.
அலுவலக எண்.3, கதவு எண்.12,
முதல் பிரதான சாலை,
கூட்டுறவு சங்க, வணிக வளாகம்,
நங்க நல்லூர். சென்னை-600 061
கைபேசி எண். 93645 54936
E.mail-kesavanlawoffice@gamil.com

**PUBLIC NOTICE**

This is to inform to the public that my client Mrs. R.Amutha, W/o. Late K.Rangasamy, aged about 54 years, residing at No.24, Ellai Muthamman Koil Street, Palavanthangal, Chennai - 600114, is one of the owners of the land property bearing Plot No.18, measuring an extent of 1968 Sq.ft out of 1 Acre 10 Cents in Old S.No.389/A, New S.No.389/1B, in Chettipunniya Village, Kattankulathur Panchayat Union, Kancheepuram District. My client's husband Mr.K. Rangasamy had purchased the property measuring an extent of 1 Acre 10 cents in Old S.No.389/A, New S.No.389/1B in Chettipunniyam Village, Kancheepuram District, from Mr. Parthasarathy Iyankar under Sale Deed dated on 13.02.1984, registered as D.No.235/1984, registered at the office of S.R.O. Jt-II, Chenglepet. My client's husband Mr.K.Rangasamy, converted the side property into plots and solds the plots to various persons and he kept the Plot No.18, measuring an extent of 1968 Sq.ft. in Old S.No.389/A, New S.No.389/1B, in Chettipunniyam Village, for this own use. Mr.K.Rangasamy died on 05.01.2019, left behind my client, her daughters Mrs. Nithyapirya.S and Mrs.Padmavathy.R as his legalheirs, they inherited and succeeded the said property and hence my client become one of the owners of the said property. My client lost the said original Sale Deed document D.No.235/1984, registered at the office of S.R.O. Jt-II on 10th April 2019, while taken xerox copy and attestation near Alandur Registrar office. Those who find the said document D.No.235/1984, registered at the office of S.R.O Jt-II, Chenglepet., may kindly inform or return the same to the below said address within 15 days from this notice, if any objection or document not received that my be assumed as the above said document was lost. If any person or persons misused the said document, Penal action will be taken against the said person or persons.

P.S.SHANTHI
Advocate & Notary
No.1, Pudu Street, Opp.to-Zonal Office-XII,
Alandur, Chennai - 600016.
Cell No. 9840273060

**PUBLIC NOTICE**

My Client, Mrs. Narmadha Ramesh Babu and Mr.Rishi Raghauv are the absolute owners of the property being the land of an extent of 1600 sq.ft., comprised in S.No. 249/3A part of Vanagaram Village, bearing Plot Nos.150 and 151, Porur Gardens Phase II, Vanagaram,Ambattur Taluk, Thiruvallur District.

One of the Original Parent document namely, Sale Deed dated 18. 05. 2005 (Doc. No. 3475 / 05, District Registrar - Chennai South), was misplaced by the predecessor in title. The said property is in the possession of my client and it is absolutely free from any encumbrance whatsoever.Any person having custody of the said original document or has any claim or interest over the said property, he/she is requested to forward their claims along with the relevant documents to me within 10 days of this Public Notice.

If I do not receive any claim from any person within 10 days, it will be strictly presumed that this property is absolutely free from any claim or encumbrance and no one has any claim over this property.

G.HARIDOSS (Advocate)
Flat No: 1B, The Regency, No:5,
Nungumbakkam High Road 1st lane,
Nungumbakkam, Chennai - 34.
Ph: 044 4855 5037 / 28242425

ஷெட்யூல் II
படிவம் B
**பொது அறிவிப்பு**

(2016-ம் வருடத்திய இன்சால்வன்சி அண்டு பேங்கரப்சி (லிக்குடேசன் பணிகள்) விதிமுறைகளில் 12-வதுவிதிமுறையின் கீழ்)

**விக்டரி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பங்குதாரர்களின் கவனத்திற்காக**

| வ. எண். | பொருள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் நிறுவனத்தின் பெயர் | **விக்டரி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்** |
| 2. | கார்ப்பரேட் நிறுவனம் நிறுவப்பட்ட தேதி | 27.07.2000 |
| 3. | கார்ப்பரேட் நிறுவனத்தை நிறுவிய / பதிவு செய்த அதிகாரி | 1956-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கம்பெனிகள் பதிவாளர், சென்னை. |
| 4. | கார்ப்பரேட் அடையாள எண் / கார்ப்பரேட் நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண் | U31909TN2000PLC078301 |
| 5. | கார்ப்பரேட் நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி | 850/64பி, டி.எச். ரோடு, ராயல் என்பீல்டு அருகில், திருவொற்றியூர், சென்னை-600 019, தமிழ்நாடு. |
| 6. | இன்சால்வன்சி தீர்மானம் முடிவடையும் தேதி | 07.10.2019 |
| 7. | கார்ப்பரேட் நிறுவனத்தின் லிக்குடேசன் துவக்க தேதி | லிக்குடேசன் உத்தரவு 19.11.2019 அன்று நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது. ஆனால் 26.11.2019 அன்று இ-மெயில் மூலம் உத்தரவு பெறப்பட்டது. |
| 8. | லிக்குடேட்டரின் பெயர் மற்றும் இன்சால்வன்சி அதிகாரியின் பதிவு எண். | **சின்னம் பூர்ண சந்திர ராவ் பதிவு எண். IBBI/IPA-003/IP-N000119/ 2017-2018/11298** |
| 9. | பதிவு செய்யப்பட்ட லிக்குடேட்டரின் முகவரி மற்றும் இ-மெயில் விவரங்கள் | ஃபிளாட் எண்.101, டிவிஎஸ் மகதி அபார்ட்மென்ட்ஸ், சம்பூர்ணா சூப்பர் மார்க்கெட் எதிரில், எஸ்ஆர் டிகி பள்ளி பின்புறம், லாங்கோ ஹில்ஸ் ரோடு, மணிகொண்டா, ஐதராபாத்-500 089, இ-மெயில்: irp.victory@gmail.com |
| 10. | லிக்குடேட்டாருடன் தொடர்புக்கு பயன்படும் முகவரி மற்றும் இ-மெயில் விவரங்கள் | ஃபிளாட் எண்.101, டிவிஎஸ் மகதி அபார்ட்மென்ட்ஸ், சம்பூர்ணா சூப்பர் மார்க்கெட் எதிரில், எஸ்ஆர் டிகி பள்ளி பின்புறம், லாங்கோ ஹில்ஸ் ரோடு, மணிகொண்டா, ஐதராபாத்-500 089, இ-மெயில்: irp.victory@gmail.com |
| 11. | கோரிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதற்கான கடைசி தேதி | 28.12.2019 |

**விக்டரி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் லிக்குடேசன் பணிகள் துவக்கத்திற்கான உத்தரவை 19.10.2019 அன்று மாண்புமிகு தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச் பிறப்பித்துள்ளது. ஆனால் அந்த உத்தரவு 26.11.2019 அன்று இ-மெயில் வழியாக பெறப்பட்டது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. **விக்டரி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் பங்குதாரர்கள் அவர்களது கோரிக்கைகளின் ஆதாரங்களை 28.12.2019 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வரிசை எண்.10-ல் குறிப்பிடப்பட்ட லிக்குடேட்டர் முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிதி கடன்தாரர்கள் அவர்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை மின்னணுவியல் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இதர அனைத்து பங்குதாரர்கள் அவர்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னணுவியல் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

**கோரிக்கைகளுக்கான தவறான அல்லது முறையற்ற ஆதாரங்களை சமர்ப்பித்தால் அபராதங்கள் விதிக்கப்படும்.**

தேதி: 28.11.2019
இடம்: ஐதராபாத்

ஒ-ம்/- சின்னம் பூர்ண சந்திர ராவ்,
லிக்குடேட்டர் விக்டரி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டுக்காக

**பொது அறிவிப்பு**

(2016-ம் வருடத்திய இன்சால்வன்சி அண்டு பேங்கரப்சி போர்டு ஆப் இந்தியாவின் 6வது விதிமுறையின் கீழ்
(கார்ப்பரேட் நபர்களுக்கான இன்சால்வன்சி தீர்மானத்துக்கான செயல்முறை) அறிவிப்பு)

**ஜிகேசி புராஜக்ட்ஸ் லிமிடெட் கடன்தாரர்களின் கவனத்திற்கு**

| போதுமான விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் நிறுவனத்தின் பெயர் | **M/s. ஜிகேசி புராஜக்ட்ஸ் லிமிடெட்** |
| 2. | கார்ப்பரேட் நிறுவனம் நிறுவப்பட்ட தேதி | 05/04/2004 |
| 3. | கார்ப்பரேட் நிறுவன பொறுப்பாளராக நிறுவப்பட்ட / பதிவு செய்த அதிகாரத்திற்குரியவர் | RoC- ஐதராபாத் |
| 4. | கார்ப்பரேட் அடையாள எண் / கார்ப்பரேட் நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண். | U45200TG2004PLC043015 |
| 5. | கார்ப்பரேட் நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி | எஸ்ஒய். எண்.9 (பி), சில் கிரீன் பில்டிங் லேன், ஹைடெக் சிட்டி, கொண்டாபூர், ஐதராபாத், தெலுங்கானா - 500 084, இந்தியா. |
| 6. | கார்ப்பரேட் நிறுவனம் தொடர்பாக இன்சால்வன்சி துவக்க தேதி | 21.11.2019 (25.11.2019 அன்று உத்தரவின் நகல் பெறப்பட்டது). |
| 7. | மதிப்பிடப்பட்ட இன்சால்வன்சி தீர்மானத்தின் படி மூடப்படும் தேதி | 18.05.2020 |
| 8. | இன்சால்வன்சிக்கான இடைக்கால அதிகாரியின் பெயர் மற்றும் பதிவு எண் | **மதுசூதன் ராவ் கோனுகுண்டா & IBBI/IPA-001/IP-P00181/2017-18/10360** |
| 9. | பதிவு செய்யப்பட்ட இடைக்கால தீர்மான அதிகாரியின் முகவரி மற்றும் இ-மெயில் விவரங்கள் | 7-1-285, ஃபிளாட் எண்.103, ஸ்ரீ சாய் ஸ்வப்னசம்பட அபார்ட்மென்ட்ஸ், பல்காம் பேட்டை, சஞ்சீவ்ரெட்டி நகர், ஐதராபாத், தெலுங்கானா-500 038. இ-மெயில்: madhucs1@gmail.com |
| 10. | பதிவு செய்யப்பட்ட இடைக்கால தீர்மான அதிகாரியின் தொடர்புகொள்வதற்கான முகவரி மற்றும் இ-மெயில் | 7-1-285, ஃபிளாட் எண்.103, ஸ்ரீ சாய் ஸ்வப்னசம்பட அபார்ட்மென்ட்ஸ், பல்காம் பேட்டை, சஞ்சீவ்ரெட்டி நகர், ஐதராபாத், தெலுங்கானா-500 038. இ-மெயில்: gkcirp@gmail.com; madhucs1@gmail.com |
| 11. | கோரிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதற்கான கடைசி தேதி | 09.12.2019 |
| 12. | கடன்தாரர்கள் ஏதேனும் இருப்பின் அவர்களது பிரிவு 21, உட்பிரிவு (6A), ஷரத் (b)ன் கீழ் இடைக்கால தீர்மான அதிகாரியால் அறுதியிடப்பட்டவை | **கணக்கு புத்தகங்களின் சரிபார்ப்பில் அடையாளம் காணப்படும்.** |
| 13. | ஒரு பிரிவில் கடன்தாரர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்படுவதற்கு அடையாளம் காணப்பட்ட இன்சால்வன்சி அதிகாரிகளின் பெயர்கள் (ஒவ்வொரு பிரிவிலும் 3 பெயர்கள்) | தற்போது வரை பொருந்தாது |
| 14. | (a) தொடர்புடைய படிவங்கள் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்கள் வருமாறு: | இணைய லிங்: https://www.ibbi.gov.in/home/downloads பிசிக்கல் முகவரி: பொருந்தாது |

தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம், 21.11.2019 அன்று **M/s. ஜிகேசி புராஜக்ட்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் கார்ப்பரேட் இன்சால்வன்சி தீர்மானத்தின் துவக்க வரைமுறையானது அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் **25.11.2019** அன்று உத்தரவின் நகல் பெறப்பட்டது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**M/s. ஜிகேசி புராஜக்ட்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் கடன்தாரர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை **09.12.2019** தேதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வரிசை எண்.10-ல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பது இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நிதி கடன்தாரர்கள் அதற்கான ஆதாரங்களை மின்னணு மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். இதர அனைத்து கடன்தாரர்களும் அவர்களின் கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ அனுப்பலாம்.

படிவம் CA-ல் குறிப்பிட்டுள்ள படி (குறிப்பிடப்பட்ட பிரிவு) வரிசை எண் 12-ல் குறிப்பிட்டுள்ள பதிவு செய்யப்பட்ட இடைக்கால அதிகாரிக்கு எதிராக கடன்தாரர்களால் அடையாளம் காணப் பட்ட வரிசை எண்.13-ல் குறிப்பிட்ட மூன்று தொழில்முறை இன்சால்வன்சி பிரதிநிதிகள் அங்கீகரிக்கப்படுவார்கள்.

தவறான அல்லது முரணான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர் தண்டனைக்கு ஆளாவார்.

தேதி : 27.11.2019
இடம்: ஐதராபாத்

இடைக்கால தீர்மான அதிகாரியின் பெயர் மற்றும் கையெழுத்து
ஒ-ம்/- மதுசூதன் ராவ் கோனுகுண்டா

**PUBLIC NOTICE**

This is to inform the public that construction agreement date 16/08/2004 was misplaced / lost on 20/10/2019. The construction agreement pertains to the property situated at (address) Flat No.2, Old Door No.3, New Door No.12, Srinivasa Avenue Road, Raja Annamalaipuram, Chennai – 600028. Any person who has any objection or find the aforesaid documents within a period of 7 days from the date of this notice is requested to approach the undersigned and submit the same. KNS Law Of Chamber, New Number 13, Old 5/1, Jagadeeswaran Street, T.nagar, chennai-17. ph.044-43516118, kaushikns@gmail.com.

**பொது அறிவிப்பு**

பொதுமக்களுக்கு இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் எனது கட்சிக்காரர் T.வல்சலா க/பெ திரு. C.சதீஷ். என்பவரது பத்திரம் கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் உட்பிரிவில் உள்ள Doc No.215/2005 வெல்கம் காலனியில் உள்ள S.No.1 மற்றும் வாலாஜபாத் சார் பதிவாளர் உட்பிரிவில் உள்ள Doc No.1830/2006, S.No.228/2A, பட்டா எண்.172 ஆகிய இரு பத்திரத்தையும் சேலையூர் பஸ் நிலையத்தில் தவற விட்டார் இதை கண்டு பிடித்து தருபவர்க்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

இப்படிக்கு
வ.முருகையன் வழக்கறிஞர்
7550183855

**உயர்நீதிமன்றம் சென்னை**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண்.767/2019**

இந்திய வாரிசு உரிமைச்சட்டம் (XXXIX OF 1925) தொடர்பான மனுவில் 07.06.2017 மற்றும் 18.06.2009 அன்று இறந்துபோன வர்களுமான திருமதி. சாவித்ரி ராமச்சந்திரன் மற்றும் திரு. ராமச்சந்திரன் பாலகிருஷ்ணன் அவர்களுடைய பங்கு பத்திரங்கள் தொடர்பான வாரிசுரிமை கோரும்- மனு.

1. ஜெயா ராமச்சந்திரன்
த/பெ (லேட்) ராமச்சந்திரன் பாலகிருஷ்ணன்
வயது 58,
நெ.13524, பீச் தெரு, செரிட்டாஸ்,
கலிபோர்னியா - 90703, யு.எஸ்.ஏ.
மற்றொரு முகவரி
நெ.13/2, 1-வது குறுக்கு தெரு,
சங்கராபுரம், பெங்களூரு-560 004.
2. சுப்பிரமணியன் ராமச்சந்திரன்,
த/பெ (லேட்) ராமச்சந்திரன் பாலகிருஷ்ணன்,
வயது 51
நெ.10, ஈஸ்ட்டர் புரூக் Dr.,
பிரின்ஸ்டன், நியூ ஜெர்ஸி-08536, யு.எஸ்.ஏ.
1-ம் மற்றும் 2-வது மனுதாரர்களுடைய
பொது அதிகார முகவர்
திரு. கணேஷ் பிரசாத்,
எண்.13/2, 1-வது குறுக்கு தெரு,
சங்கராபுரம், பெங்களூரு-560 004.

...மனுதாரர்கள்

யு.எஸ்.ஏ., நியூ ஜெர்ஸி-08540, பிரின்ஸ்டன், ஈஸ்ட்டர் புரூக் Dr., நெ.10ல் வசித்து வந்தவரும் 07.06.2017 மற்றும் 18.06.2009 அன்று இறந்துபோனவர்களுமான திருமதி. சாவித்ரி ராமச்சந்திரன் மற்றும் திரு. ராமச்சந்திரன் பாலகிருஷ்ணன் அவர்களின் பங்குப்பத்திரங்கள